## 13

# சிலுவையுடன் தொடர்புடைய ஆறு அற்புதங்கள்

## மத்தேயு 27:45-54; மாற்கு 15:33-39; லூக்கா 23:44-47

*"அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ் வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது" (மத்தேயு 27:51, 52).*

யூதர்கள் இயேசுவைப் புறக்கணித்தல் குறித்து அவர்களைத் தேவன் திரும்பத் திரும்ப எச்சரித்தார். அவர்கள் விசுவாசிகள் ஆகாதிருப்பதற்கு அவர்களுக்கு எவ்வித சாக்குப்போக்கும் இருந்ததில்லை. இயேசு தெய்வீகமானவர் என்பதை யூதத்துவ நடத்துனர்கள் அறிந்திருந்தனர்; ஆனால், அவர்கள் தங்களின் வெறுப்பு மற்றும் பார்வையற்ற தன்மை ஆகியவற்றில், அவரைக் கொல்வதைத் தேர்ந்துகொண்டனர். அவர் யார் என்பதைப் பிலாத்துவும்கூட அறிந்திருந்தான், அவரை "குற்றமற்றவர்" என்று அறிவித்தான் (யோவான் 18:38).

சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு என்ன நடந்தது என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள். தோட்டத்தில் கைதுசெய்யப்படுகையில், இயேசு, "அது நான்தான்" என்று கூறியபோது, கும்பலில் இருந்த பலர் பின்னிட்டுத் தரையில் விழுந்தனர் (யோவான் 18:6). இது அந்த இழிவான விஷயம் முழுவதையும் நிறுத்தியிருக்க வேண்டும்!

பின்பு ஒரு வேலைக்காரனின் காதைக் குணமாக்குதல் இருந்தது! பேதுரு தமது பட்டயத்தை உருவி மல்கூஸ் என்பவனின் காதற வெட்டினார், ஆனால் இயேசு அதைக் குணமாக்கினார். இது இயேசு சிலுவைக்குச் செல்லுமுன்பு யூதர்களுக்கான கடைசி அற்புதமாக இருந்தது. இயேசு எது ஒன்றையும் சமாளிக்க முடிந்தவராக இருந்தார்!

ஒருக்காலும் நடந்திராத அற்புதத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது! பேதுருவிடம் இயேசு, "நான் தூதர்களின் சேனைகளை அனுப்பும்படி கேட்டுக்கொள்ள முடியும், ஆனால் நான் அவ்வாறு செய்யமாட்டேன்" என்று கூறினார். மத்தேயு 26:50-56; மாற்கு 14:46-50; லூக்கா 22:47-53 மற்றும் யோவான் 18:3-12 ஆகிய வசனப்பகுதிகளை மறுபடி மறுபடி

*வாசியுங்கள். இயேசு இந்த வேளையை, தம்மைத்தாமே பாவநிவாரணப் பலியாகத் தேவனுக்கு முன்நிறுத்துவதற்காகப் பயன்படுத்தினார்.*

*விசுவாசிக்க விரும்பாதவர்கள், சற்றுக்காலம் ஆனபின்பு, விசுவாசிக்க முடியாதவர்களாகின்றனர். சிலுவையுடன் தொடர்புடைய அற்புதங்களி னால் உலகம் நம்பவைக்கப்படாமற்போனது ஏன்?*

## *1. அந்தகாரம்*

*"ஆறாம் மணி நேரமுதல் ஒன்பதாம் மணி நேரம்வரைக்கும் பூமி யெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று" (மாற்கு 15:33; மத்தேயு 27:45; லூக்கா 23:44ஐக் காணவும்). இயேசு ஆறு மணி நேரம் சிலுவையின்மீது இருந்தார். முதல் மூன்று மணி நேரம் கும்பலுக்கு உரியதாக இருந்தது; கடைசி மூன்று மணி நேரம் தேவனுக்கு உரியதாக இருந்தது! அந்தகாரம் என்பது நரகத்திற்கு முன்காட்சியாகவும் (2 பேதுரு 2:4; யூதா 6, 13) மரித்துக்கொண்டிருப்பவர் தேவகுமாரன் என்பதை நினைவூட்டுவதாகவும் இருந்தது.*

*இந்த அந்தகாரம் என்பது சூரிய கிரகணமாக இருக்கவில்லை. சூரிய கிரகணம் என்பது ஒருசில நிமிடங்கள் மாத்திரமே இருக்கும். அதுவும் முழுநிலவு நாளன்று நடைபெற இயலாது. பஸ்கா பண்டிகையானது முழு நிலவுக் காலத்தின்போதுதான் வந்தது. அந்தகாரம் என்பது அச்சமூட்டு வதாக, மரிக்கின்ற மூன்று மனிதர்களின் புலம்புதல்கள் மற்றும் நடந்து கொண்டிருந்தவை பற்றி வியப்படைந்த மனிதர்களின் குரல்கள் தவிர விஞ்சிய அமைதிகொண்டதாக இருந்தது. கல்வாரியின் வெட்கக்கேடானது சூரியனை அணைத்துப்போட்டது. அங்கிருந்தவர்கள் இருளை மாத்திரமே காண முடிந்தது.*

## *2. திரைச்சீலை*

*மாலை மூன்று மணியளவில், இயேசு உரத்த குரலில் கதறினார். தேவாலயத்தில் ஆசாரியர்கள் ஊழியம் செய்துகொண்டிருந்தனர். அவர்களின் திகைப்பான கண்களுக்கு முன்பாக, பரிசுத்த ஸ்தலத்தையும் மகாப் பரிசுத்த ஸ்தலத்தையும் பிரித்த திரையானது மேல்தொடங்கி கீழாகக் கிழிந்தது (மத்தேயு 27:51அ; மாற்கு 15:38; லூக்கா 23:45ஆ). தேவன் தம்மை உலகப்பிரகாரமான தமது தேவாலயத்தில் இருந்து நீக்கினார். இந்தக் கணமுதல், மோசேயின் நியாயப்பிரமாணம் கடந்திருந்தது; லேவிகோத்திர ஆசாரியத்துவம் நீங்கிப் போயிற்று. பிற்பாடு பல ஆசாரியர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்ததில் வியப்பு எதுவும் இல்லை (நடபடிகள் 6:7).*

## *3. பூமியதிர்ச்சி*

*திரைச்சீலை கிழிக்கப்பட்ட அதே வேளையில், "பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது" (மத்தேயு 27:51ஆ). இந்தப் பூமியதிர்ச்சி நிச்சய மாகவே பயங்கரமாயிருந்த மர்மம் ஒன்றைக் கொண்டுவந்தது. ரோமப் போர்ச் சேவகர்களும்கூட இந்தப் பூமியதிர்ச்சியால் பயமடைந்தனர்*

*(மத்தேயு 27:54). பூமியினுடைய கடினமான பொருள்களில் ஒன்றான கன்மலைகளும் பிளந்தன! சிலுவையைத் தவிர மற்ற ஒவ்வொன்றும் அசைந்தன!*

## *4. திறக்கப்பட்ட கல்லறைகள்*

*முன்னதாக, யூதர்கள் இயேசுவிடம் ஒரு அடையாளத்தை வற்புறுத்திக் கேட்டிருந்தனர். அவர்களுக்குத் தேவன் சிலுவை தொடர்பாக ஆறு அற்புதங்களைக் கொடுத்தார். மிருகத்தனமான சக்தி, கன்மலைகளைப் பிளந்தது; கல்லறைகள் திறந்தன என்பது மதி நுட்பமான வடிவமைப்பாக இருந்தது (மத்தேயு 27:52, 53). என்ன ஒரு வழக்கத்திற்கு மாறான பூமியதிர்ச்சி! தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லறைகள் மாத்திரமே திறக்கப்பட்டன! "இந்தக்காட்சியைப் பார்க்கும்படி கூடி வந்திருந்த ஜனங்களெல்லாரும் சம்பவித்தவைகளைப் பார்த்தபொழுது, தங்கள் மார்பில் அடித்துக்கொண்டு திரும்பிப்போனார்கள்" (லூக்கா 23:48). தேவன் இன்னமும் யூதர்களுக்குப் போதித்துக்கொண்டு, அவர்களை எச்சரித்துக் கொண்டிருந்து, அவர்களைச் சேர்த்துக்கொள்ள முயற்சிசெய்துகொண்டிருந்தார். இது பெந்தெகொஸ்தே நாளன்று (நடபடிகள் 2ல் சபை தொடக்கம்) நடந்த நிகழ்ச்சிகள் தற்செயலானவை அல்ல என்பதையும் நிரூபிக்கின்றன. பேதுரு தமது முதல் சுவிசேஷ செய்தியை, "... நீங்கள் அறிந்திருக்கிறபடி" என்ற சாட்சியத்துடன் தொடங்கினார் (நடபடிகள் 2:22). அந்த வேளைக்கு முன்னதாக, சிலுவையைப் பற்றி அவர்கள் நினைத்துப் பார்க்கத் தேவன் அவர்களுக்கு ஐம்பது நாட்களைக் கொடுத்திருந்தார். பெந்தெகொஸ்தே நாளன்று, பேதுரு அவர்களுடைய குற்றங்களுக்கு - கிறிஸ்து என்ற - தீர்வைக் கொடுத்தார்.*

## *5. கல்லறைத் துணிகள்*

*இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்தார் என்பதைப் பெண்கள் அப்போஸ்தலர்களிடம் கூறிய பின்பு, பேதுருவும் யோவானும் எழுந்து அதைத் தாங்களே பார்க்க ஓடினர். அவர்கள் வெறும் கல்லறையையே கண்டனர். யோவான் உள்ளே கண்ணோக்கி உயிர்த்தெழுந்த இரட்சகரின் அத்தாட்சியைக் கண்டார்: இயேசுவின் உடலையும் முகத்தையும் மூடியிருந்த துணிகளை அவர் அங்கே கிடக்கக் கண்டார் (லூக்கா 24:1-12; யோவான் 20:1-9). வெறுமையான கல்லறை என்பதே விரோதிகள் விரும்பாத விஷயமாக இருந்தது! சீஷர்கள் அவரது சரீரத்தை எடுத்திருந்தால், அவர்கள் அதன் உடைகளைக் களைந்திருக்க மாட்டார்கள். அதன் உடைகளைக் களைவதற்கு விரோதிகள் நேரத்தை எடுத்து கொண்டிருக்க மாட்டார்கள். கல்லறைத் துணிகள் யோவானுக்குப் போதிய ஆதாரமாக இருந்தன. அவரே முதலாவது விசுவாசித்தவர் ஆனார்! (யோவான் 20:8ஐக் காணவும்.) நாமும்கூட, இதைத் தர்க்கரீதியாகச் சிந்திக்க வேண்டும்!*

## 6. உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள்

வெள்ளிக்கிழமையன்று கல்லறைகள் திறக்கப்பட்டன (மத்தேயு 27:50-53). உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள்[1] ஞாயிற்றுக்கிழமை வரையில் எருசலேமில் நடக்கத் தொடங்கவில்லை. யூதர்கள் சடங்காச்சார ரீதியாகச் சுத்தமாக இருப்பதற்காக, அவர்கள் தங்களை விட்டுப் பிரிந்து சென்ற அன்பானவர்களுக்கு வாழ்த்துதல் கூறக்கூடாதிருந்தது. என்ன ஒரு நினைவு கூரத்தக்க அற்புதம்! நீங்கள் அங்கிருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?

சிலுவையுடன் தொடர்புடைய இந்த ஆறு அற்புதங்களும், சிலுவையில் அறையப்பட்டவர் தேவனுடைய அன்பான குமாரன் என்பதற்குச் சாட்சியம் அளிக்கின்றன. இவைகள் வழக்கிட இயலாத நிரூபணத்தைத் தருகின்றன. புதிய ஏற்பாடு என்ற ஆதாரமூலத்தை நம்புகிற எவரும், திகைப்பூட்டும் இந்த அற்புதங்களினால் அதற்கு [புதிய ஏற்பாட்டிற்கு] நம்பி இணங்க வேண்டும்.

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

குறிப்பு

[1]"பரிசுத்தவான்கள்" என்பவர்கள் பரிசுத்தமான வாழ்க்கைக்காகப் பிரித்து வைக்கப்பட்டவர்களாக உள்ளனர் (1 கொரிந்தியர் 1:2ஐக் காணவும்). புதிய ஏற்பாட்டில், எல்லாக் கிறிஸ்தவர்களும் "பரிசுத்தவான்கள்" என்று அழைக்கப்படுகின்றனர்.